பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
01 12 2024 6 45
ஞாயிற்றுக் காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- வங்கக் கடலில் உருவான Fenjal புயல் நேற்றிரவு காரைக்காலுக்கும் - மாமல்லபுரத்துக்கும் இடையே புதுச்சேரியில் கரையைக் கடந்தது.

- சென்னையில் சுரங்கப் பாதைகளில் தேங்கியுள்ள தண்ணீர் இன்று முழுமையாக அகற்றப்படும் என்று வருவாய்த்துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

- புயல் மற்றும் மழையால் பாதிக்கப்பட்ட ஏழு மாவட்டங்களில் இன்று மருத்துவ முகாம்களுக்கு மக்கள் நல்வாழ்வுத்துறை ஏற்பாடு செய்துள்ளது.

- ஒடிசா மாநிலம், புவனேஸ்வரில் நடைபெறும் காவல்துறை தலைமை இயக்குநர்கள் மாநாட்டில் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று இரண்டாவது நாளாக பங்கேற்று அதிகாரிகளுடன் கலந்துரையாடுகிறார்.

- இளையோர் ஆசியக் கோப்பை ஹாக்கிப் போட்டியில் இந்தியா - சீன தைபேய் அணியை வென்றது.

-----இனி விரிவான செய்திகள்-----

<<<<>>>>

வங்கக் கடலில் உருவான Fenjal புயல் நேற்றிரவு காரைக்காலுக்கும் - மாமல்லபுரத்துக்கும் இடையே புதுச்சேரியில் கரையைக் கடந்தது.

இது மேற்கு — தென்மேற்கு திசையில் நகர்ந்து வலுவிழக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

புயல் கரையைக் கடந்தபோது மணிக்கு 70 முதல் 90 கிலோ மீட்டர் வேகத்தில் பலத்த காற்று வீசியதால் மாமல்லபுரம், மரக்காணம் உள்ளிட்ட பல இடங்களில் மரங்கள் முறிந்து விழுந்தன.

சென்னையைப் பொறுத்தவரை நேற்று மாலையில் இருந்து மழையின் தாக்கம் குறைந்தது.

இருப்பினும் புயல் காரணமாக ஏற்பட்ட கனமழையால் நகரின் தாழ்வான பகுதிகளிலும், புறநகர்ப் பகுதிகளிலும் தண்ணீர் தேங்கியுள்ள பகுதிகளில் அதனை அகற்றும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

முன்னதாக நேற்றிரவு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின், எண்ணூர் முகத்துவாரம் அருகே நடைபெற்று வரும் தூர்வாரும் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

நீர்வளத்துறையின் சார்பில் 23 கோடியே 38 லட்சம் ரூபாய் செலவில் தூர்வாரும் பணிகள் நடைபெற்று வருவதாக அப்போது அவரிடம் அதிகாரிகள் தெரிவித்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய துணை முதல்வர் திரு. உதயநிதி ஸ்டாலின், மாநில அரசு மற்றும் சென்னை மாநகராட்சி எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால் நகரம் வெள்ளத்தால் பாதிக்கப்படவில்லை என்று கூறினார்.

முன்கூட்டியே தூர்வாரப்பட்டதால் பக்கிங்ஹாம் கால்வாய், ஓட்டேரி நல்லா கால்வாய்களில் மழைநீர் தங்குதடையின்றி செல்வதாகவும் அவர் கூறினார்.

இந்நிலையில் சென்னையில் சுரங்கப் பாதைகளில் தேங்கியுள்ள தண்ணீர் இன்று அகற்றப்படும் என்று வருவாய்த்துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர். நகரில் மழை மற்றும் காற்றின் வேகம் குறைந்துள்ளது என்றும் முந்தைய புயல்களைப் போல் Fenjal புயல் பெரிய பாதிப்புகளை ஏற்படுத்தவில்லை என்றும் கூறினார்.

<<<<>>>>

சென்னையில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ள பகுதிகளில் வெள்ளநீர் வடிந்தவுடன் மீண்டும் மின் இணைப்பு வழங்கப்படும் என்று மின்சார வாரியம் தெரிவித்துள்ளது.

சென்னை பெரம்பூர், அயனாவரம் பகுதிகளில் கனமழையால் பாதிக்கப்பட்டு நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு, மாநகராட்சி மேயர் திருமதி பிரியா ஆகியோர் நேரில் சந்தித்தனர்.

அவர்களுக்கு அங்கு செய்து தரப்பட்டுள்ள அடிப்படை வசதிகளை ஆய்வு செய்தனர்.

இந்நிலையில் சென்னை வேளச்சேரியில் நேற்று மின்சாரம் தாக்கி உயிரிழந்த சக்திவேல் என்பவரது குடும்பத்தினருக்கு 5 லட்சம் ரூபாய் நிவாரணம் வழங்க முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

புயல் காரணமாக வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் மரக்கிளைகள் விழுந்துள்ளதால் பராமரிப்புப் பணி காரணமாக இன்று பூங்கா செயல்படாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

மழைநீர் தேங்கியதால் நேற்று மூடப்பட்ட சென்னை விமான நிலையம் இன்று காலை மீண்டும் திறக்கப்பட்டது.

விமானங்களின் வருகை மற்றும் புறப்பாடு வழக்கமான நிலையை எட்டியுள்ளதாக விமான நிலைய அதிரிகாரிகள் தெரிவித்தனர்.

<<<<>>>>

அரசுப் பள்ளிகளுக்குத் தேவையான ஆசிரியர்களை விரைவில் பணியமர்த்துவதற்கான நடவடிக்கைகளை மாநில அரசு மேற்கொண்டுள்ளதாக பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு அன்பில் மகேஷ் தெரிவித்துள்ளார்.

திருச்சியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பள்ளிக் கல்வித்துறைக்கு அதிக அளவில் ஆசிரியர்கள் தேவைப்படுவதாகக் கூறினார்.

ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சியடைந்தவர்களை விரைவில் பணியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.,

நாகை மாவட்டத்தில் கனமழைக்குப் பின் தற்போது இயல்பு நிலை திரும்பியுள்ளதாகக் கூறிய அவர், ஐயாயிரத்து 400 ஹெக்டேரில் நெற்பயிர்கள் தண்ணீரில் மூழ்கியதாகவும், மழை விட்ட பின்னரே தண்ணீர் வடிந்து வருவதாகவும் தெரிவித்தார்.

மாவட்டத்தின் பிற பகுதிகளில் பயிர்ச்சேதம் ஏற்பட்டிருந்தால் உரிய கணக்கெடுப்பு நடத்தப்பட்டு விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திரு அன்பில் மகேஷ் தெரிவித்தார்.

<<<>>>

புயல் மற்றும் மழையால் பாதிக்கப்பட்ட ஏழு மாவட்டங்களில் இன்று மருத்துவ முகாம்களுக்கு மக்கள் நல்வாழ்வுத்துறை ஏற்பாடு செய்துள்ளது.

சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களில் 500 இடங்களில் இந்த முகாம்கள் நடத்தப்பட உள்ளது.

மழை மற்றும் புயல் பாதிப்பால் காய்ச்சல், சளி, ரத்தக்கொதிப்பு, நீரழிவு போன்றவற்றை பரிசோதித்து அதற்கான சிகிச்சை வழங்கப்பட உள்ளது.

சென்னையில் 200 இடங்களிலும், மற்ற ஆறு மாவட்டங்களில் தலா 50 இடங்களிலும் இந்த முகாம்கள் நடத்தப்படும் என்று மக்கள் நல்வாழ்வுத்துறை தெரிவித்துள்ளது.

<<<>>>

திருவள்ளூர் மாவட்டத்தில் மழையின் தாக்கம் குறைந்துள்ளதால் பொதுமக்கள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பியுள்ளனர்.

தாழ்வான பகுதிகளைச் சேர்ந்த மக்கள் நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்பட்டு அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்து தரப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

ஒடிசா மாநிலம், புவனேஸ்வரில் நடைபெறும் காவல்துறை தலைமை இயக்குநர்கள் மாநாட்டில் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று தொடர்ந்து இரண்டாவது நாளாக பங்கேற்று அதிகாரிகளுடன் கலந்துரையாடுகிறார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தோவல், மத்திய உள்துறை செயலர் திரு. கோபிந்த் மோகன் ஆகியோரும் இந்த மாநாட்டில் கலந்துகொள்கிறார்கள்.

நாட்டில் நிலவும் தேசிய பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக மாநில மற்றும் யூனியன்பிரதேச காவல்துறை தலைமை இயக்குநர்களுடன் பிரதமர் கலந்துரையாட உள்ளார்.

காவல்துறை எதிர்கொள்ளும் பல்வேறு சவால்களையும், உள்கட்டமைப்பை பலப்படுத்த வேண்டிய அவசியம் குறித்தும் அவர்களுடன் பிரதமர் விவாதிக்க உள்ளார்.

---------------

*இருவரிச் செய்திகள்*

சீனாவுடன் பதற்றம் உள்ள நிலையில் தைவானுக்கு 385 மில்லியன் டாலர்கள் மதிப்பிலான ஆயுதங்கள் விற்கப்படும் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

------------

கடும் பணவீக்கம் உள்ள நிலையில் பாகிஸ்தானில் பெட்ரோல், டீசல் மற்றும் சமையல் எரிவாயு விலைகள் உயர்த்தப்பட்டுள்ளன.

------------

இந்தியா – மலேசியா கூட்டு ராணுவப் பயிற்சி ஒத்திகை நாளை முதல் இம்மாதம் 15ஆம் தேதி வரை கோலாலம்பூரில் நடைபெற உள்ளது.

------------

கட்டாய மதமாற்றத் தடைச் சட்டத்திற்கு ராஜஸ்தான் மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

------------

உலக எய்ட்ஸ் தினம் இன்று அனுசரிக்கப்படுவதை ஒட்டி, நாடு முழுவதும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

------------

அரக்கோணத்தில் இருந்து சென்னைக்கு காலை மணி 6.30க்கு இயக்கப்படும் புறநகர் மின்சார விரைவு ரயில் கூடுதலாக திருநின்றவூர் ரயில் நிலையத்தில் நாளை முதல் நின்று செல்லும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

------------

தருமபுரி மாவட்டத்தில் நீர்நிலைகளில் விளையாட சிறுவர், சிறுவர் மற்றும் குழந்தைகளை அனுமதிக்க வேண்டாம் என்று பொதுமக்களை மாவட்ட நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளது.

------------

மன்னார்குடி ராஜகோபாலசுவாமி கோயில் யானை செங்கமலத்திற்கு முன்பு பக்தர்கள் புகைப்படம் எடுக்கவோ, செல்ஃபி எடுக்கவோ அனுமதி இல்லை என்று கோயில் நிர்வாகம் அறிவித்துள்ளது.

------------

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மத்திய-மாநில அரசுகள் இணைந்து செயல்படுத்துகின்ற விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தில் அதிக அளவு பயனாளிகளை சேர்க்க வேண்டும் என்று அம்மாவட்டத்திற்கான் கண்காணிப்பு அலுவலர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ் கேட்டுக்கொண்டுள்ளார்.

------------

கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்ன சேலத்தில் பேக்கரி கடைகளில் உணவுப் பாதுகாப்புத்துறை அதிகாரிகள் நேற்று திடீர் சோதனை நடத்தினர்.

------------

காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்தூர் ஒன்றியம் பரணிபுத்தூர் ஊராட்சியில் தேங்கிய மழைநீர் வெளியேற்றப்படுவதை மாவட்ட ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் நேற்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

------------

*விளையாட்டுச் செய்திகள்*

இளையோர் ஆசியக் கோப்பை ஹாக்கிப் போட்டியில் இந்தியா தொடர்ந்து 3வது வெற்றியை பதிவு செய்துள்ளது.

மஸ்கட்டில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் இந்தியா 16-0 என்ற கோல் கணக்கில் சீன தைபேய் அணியை வென்றது.

இன்று நடைபெறும் ஆட்டத்தில் இந்தியா - தென்கொரிய அணியை சந்திக்கிறது.

--------------

சையத் மோடி சர்வதேச பேட்மிட்டன் போட்டியில் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் இந்தியாவின் பி.வி. சிந்து – சீனாவின் Wu Luo Yu-ஐ எதிர்கொள்கிறார்.

இந்தப் போட்டி லக்னோவில் இன்று பிற்பகல் நடைபெற உள்ளது.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் இந்தியாவின் லக்ஷ்யாசென் - சிங்கப்பூரின் Jia Heng Jasaon-ஐ எதிர்கொள்கிறார்.

கலப்பு இரட்டையர் இறுதிப் போட்டியில் இந்தியாவின் துருவ் கபிலா – தனிஷா கிரஸ்டோ இணை, தாய்லாந்தின் Dechapol – Supissara இணையை எதிர்கொள்கிறது.

-------------

நொய்டாவில் இன்று நடைபெறும் ப்ரோ கபடி லீக் போட்டியில் தமிழக அணி – தில்லி அணியை எதிர்கொள்கிறது.

-------------

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் மோகன் பஹன் அணி 1-0 என்ற கோல் கணக்கில் சென்னை அணியை வென்றது.

<<<<The End>>>>